கிண்ணியா பிரதேச சபை

திருகோணமலை மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுகள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 !லை 07 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 பெப்ரவரி 20 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 செப்டம்பர் 01 ஆம் திகதி சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கிண்ணியா பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் காசுப்பாய்ச்சல் கூற்றும் உரிமை மூலதனத்தில் மாற்றங்களின் கூற்றும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு சமர்ப்பிக்கப்படவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 3 படி நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பேரேட்டின் படி மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான பணியாளர் கடன் மீதி ரூபா 422,884 ஆகக் காணப்பட்ட போதிலும் நிதிக்கூற்றுக்களில் அம்மீதி ரூபா 443,884 ஆகக் காட்டப்பட்டதினால் நிதிக்கூற்றுக்களில் பணியாளர் கடன் மீதி ரூபா 21,000 தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததது.

#### 1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

2006 ஆம் ஆண ்டிற்கு முன்னர் கடமையை விட்டு விலகிச் சென்ற மற்றும் ஏனைய அரச நிறுவனங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற 13 ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் நிலுவை ரூபா 137,749 தொகையை உரிய ஊழியர்களிடமிருந்து அல்லது அவர்களின் பிணையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 1.3.5 கணக்காய்வுக்கான சான்றுகள் இன்மை

பின்வரும் ஒவ்வொரு கணக்கு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்கு விடயம் | பெறுமதி<br>ரூபா. | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| காணிகளும், கட்டடங்களும் | 6,290,992 | காணி உரிமைப்பத்திரம் |
| பொறித் தொகுதிகள் இயந்திரங்கள் | 1,308,575 | நிலையான சொத்துப் பதிவேடுகள், மற்றும் மெய்மையாய்வுச் சபை அறிக்கைகள் |
| தளபாடங்கள் | 1,183,135 | |
| மோட்டார் வாகனம் | 4,429,710 | |
| முற்பணப் பெறுகை | 183,544 | முற்பண பதிவேடும் காலப்பகுப்பாய்வும் |
| கடன் வழங்குனர் | 2,699,687 | மீதிகளின் உறுதிப்படுத்தல் கடிதம் |

### 1.3.6 சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் போன்றவற்றுக்கான தொடர்பு | விடயங்கள் |
|---|---|
| (அ) 1987ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் | |
| (i) பிரிவு 134 (1) | பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் அசைவற்ற ஆதனங்களை இனம் கண்டு அவற்றின் பெறுமதியை மதிப்பீடு செய்து வீதவரி அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) பிரிவு 219 | சந்தைக் கடை குத்தகை வாடகை வியாபார உரிமக்கட்டணங்களின் பெறுமதி ரூபா 5,772,639 அறவிட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

(ஆ) 1988ம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதிகள்.

| | |
|---|---|
| (i) அத்தியாயம் I இன் பிரிவு 5(XII) | பணம், களஞ்சியப்பொருட்கள் மற்றும் காசோலைகளில் கையொப்பம் இடல் என்பவை மூன்று உத்தியோகத்தர்களுக்கு நிர்வாகரீதியாக ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அவர்களிடமிருந்து பாதுகாப்பு பிணை பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ii) அத்தியாயம் VII இன் பிரிவு 158 | மீளாய்வாண்டிற்கான திரட்டிய செலவினம் பற்றிய மாதாந்த தொகுப்பு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) அத்தியாயம் VII இன் பிரிவு 164 | செயலாளர் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தரினால் கணக்கீட்டு ஆவணங்கள் நாள்தோறும் செவ்வை பார்த்து அதிலுள்ள மீதிகளின் செம்மை பற்றி முதலெழுத்து ஒப்பம் இடப்பட்டிருக்கவில்லை. |

(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி பிரமாணம்

| | |
|---|---|
| (i) பிரிவு 387 | காசோலை மூலம் கொடுப்பனவு செய்வதற்கு முன்னர் வங்கி மீதி போதுமானதாக உள்ளதென கொடுப்பனவு உத்தியோகத்தர் உறுதிப்படுத்திய பின்னரே காசோலை எழுத வேண்டுமென கூறப்பட்டு இருந்த போதும் கடந்த 03 வருடங்களாக காசேட்டு மீதி செலவு மீதியாக இருக்கும் போது காசோலைகள் எழுதப்பட்டதுடன் 2014 டிசம்பர் 31 ஆம் திகதி காசேட்டின் படி வங்கி மீதி ரூபா 2,388,012 தொகையானது செலவு மீதியாக காணப்பட்டது. |

(ஈ) மாகாண நிதி ஒழுங்கு விதி(PFR)

| | |
|---|---|
| (i) PFR 131.3 | ஒழுங்கு விதியின் பிரகாரம் பெறுவனவுகளுக்கான பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்பட்ட பின் பற்றுச்சீட்டுக்களின் அடியிதழ்கள் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களினால் பாதுகாப்பாக வைக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் ரூபா.3,370,974 தொகையான வருமானம் பெறப்பட்டதிற்காக வழங்கப்பட்ட பற்றுச்சீட்டுக்களின் அடியிதழ்கள் காணாமல் போயிருந்தன. எனினும் இது தொடர்பாக சபையினால் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (ii) PFR 187.2 | மீளாய்வாண்டில் ரூபா.3,253,657 கூட்டுத் தொகையான 44 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் காணாமல் போயிருந்த போதிலும் உரிய ஏற்பாடுகளின் பிரகாரம் இது தொடர்பாக உடனடியாக கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் மாகாண திறைசேரிக்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>இவ்வாறே ரூபா. 2,106,258 கூட்டுமொத்த தொகையான 68 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் காணாமல் போயிருந்தமை 2013 ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட போதிலும் இது தொடர்பாகவும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப் பட்டிருக்கவில்லை. |
| (உ) IAI/2002/02 ஆம் இலக்க 2002 நவம்பர் 28 ஆந் திகதிய திறைசேரி சுற்றறிக்கை | கணனிகளின் உதிரிப்பாகங்கள், கணனி மென்பொருட்கள் என்பவற்றை பதிவதற்கான தனியான பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின்படி 2014 திசெம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் வருமானங்களிலும் கூடிய செலவினம் ரூபா 41,003 ஆகும். இதற்கெதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 203,899 ஆக இருந்தது.

### 2.2 வருமான முகாமைத்துவம்

#### 2.2.1 வருமான சேகரிப்பு செயலாற்றல்

சபையினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் என்பவற்றிற்கிடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடு அவதானிக்கப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | 2014 திசெம்பர் 31இல் நிலுவை மீதி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரிகள் | 35,000 | 205,829 | (170,829) |
| வாடகை | 1,869,000 | 1,312,630 | 556,370 |
| சேவைகளுக்கான கட்டணம் | 500,000 | - | 500,000 |
| அரசிறை வருமானம் | 10,102,402 | 9,203,878 | 898,524 |

#### 2.2.2 தொலைத் தொடர்பு கோபுரங்களுக்காக கட்டணம் அறவிடல்

சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தனியார் நிறுவனங்களால் நிறுவப்பட்டுள்ள 07 தொலைத் தொடர்பு கோபுரங்களுக்காக சபையினால் கட்டணங்கள் அறவிடப்படாததால் சபை வருடாந்தம் ரூபா 21,000 தொகையான வருமானத்தை இழந்துள்ளது.

3. முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் சபைக்கு ஒப்படைக்கப்பட்ட 13 மோட்டார் வாகனங்களின் பெறுமதியை மதிப்பிட்டு கணக்கிற்கு கொண்டுவர ஒன்பது ஆண்டுகளாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1991 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டுவரை நூல் நிலையத்தின் அங்கத்தவர்களுக்கு இரவல் வழங்கப்பட்ட 1,223 எண்ணிக்கையான நூலக புத்தகங்களை மீளப்பெறுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2014 ஆம் ஆண்டிற்கான மெய்மையாய்வுச் சபை அறிக்கையில் 138 களஞ்சியப் பொருட்களும் 329 நூலகப் புத்தகங்களும் பற்றாக்குறையாகக் காணப்படுகின்றமை சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பாக சபையினால் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

(ஈ) 2006 ஆம் ஆண்டு தொடக்கம் ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட்ட ஊழியர் சேமலாப நிதியத்திற்கான ரூபா 602,701 தொகையான பங்களிப்புப் பணத்தையும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கான ரூபா 60,181 தொகையான பங்களிப்பு பணத்தையும் உரிய நிதியங்களுக்கு அனுப்பி வைக்காமல் வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

(உ) ரூபா 2,372,668 கூட்டுத்தொகையான ஓய்வூதியப் பங்களிப்பு பணம் கொடுத்துத் தீர்க்கப்படாது எட்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக காணப்படுகின்றது.

(ஊ) மீளாய்வாண்டிற்கான கொடுப்பனவுகளுக்காக வரையப்பட்ட ரூபா 207,048 கூட்டுமொத்த தொகையான 23 காசோலைகள் உரியவர்களுக்கு வழங்கப்படாது அலுவலகத்தில் காணப்பட்ட போதிலும் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் வழங்கப்பட்ட ஆனால் கொடுப்பனவுக்குச் சமர்ப்பிக்கப்படாத காசோலைகளாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

(எ) 2011 சனவரி தொடக்கம் 2013 ஒக்டோபர் மாதம் வரையான காலத்திற்குரிய ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்பு பணம் ரூபா 1,210,977 கூட்டுமொத்த தொகையானது உரிய காலங்களில் செலுத்தப்படாமையினால் தண்டப்பணம் ரூபா 540,772 தொகையையும் இது தொடர்பாக நிதியத்தினால் தொடுக்கப்பட்ட வழக்கிற்கான செலவாக ரூபா 50,000 தொகையையும் சபை செலுத்த வேண்டி ஏற்பட்டது.

(ஏ) பொருள் இருப்பு பதிவேட்டின் படி 2015 ஆகஸ்ட் 12 ஆந் திகதியில் 251 குப்பைத் தொட்டிகள் களஞ்சியத்தில் உள்ளமை வெளிப்படுத்தப்பட்ட போதிலும் அத்திகதியில் மேற்கொண்ட நேரடிப் பரீட்சிப்பின் போது அக்குப்பைத் தொட்டிகள் களஞ்சியத்தில் காணப்படவில்லை.

4. திண்மக்கழிவு முகாமைத்துவம்

திண்மக்கழிவு முகாமைத்துவ திட்டத்தின் கீழ் ரூபா.1,345,000 பெறுமதிக்கு திண்மக்கழிவு சேகரிக்கும் நிலையத்திற்கு கம்பிவலையால் சுற்றுவேலி அமைப்பதற்காக சபையினால் 2011 நவம்பர் 22 ஆம் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மதிப்பபீட்டின் பிரகாரம் சுற்றுவேலிக்கு 2979 சதுர அடி கொண்ட கம்பிவலைகள் பொருத்தப்படும் போது அதன் மேல் பகுதிக்கு இரும்புக் கம்பிகள் பொருத்தப்பட்டு அந்த இரும்புக் கம்பியுடன் அவ்வலைகள் பொருத்தப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்படாததனால் நிறுவப்பட்ட சுற்றுவேலியின் மூலம் எதிர்பார்த்த பலனை அடையமுடியாதிருந்தது.

(ஆ) திண்மக்கழிவு சேகரிக்கும் நிலையத்தின் தளத்திற்கு கிரவல் வழங்கி பரப்புவதற்கும் அதனை அமுக்கியினால் அமுக்குவதற்கும் ரூபா.1,430,000 தொகை செலுத்தப்பட்ட போதிலும் பரப்பப்பட்ட கிரவல்கள் அமுக்கியினால் அமுக்கப்படாததால் பல இடங்களில் குழிகள் தோன்றியிருந்தன.

(இ) ஒப்பந்தகாரர்களால் நிர்மாணிக்கப்பட்ட 125 சதுர அடி நீளமான சுற்றுவேலி இனந்தெரியாதவர்களால் அகற்றப்பட்டு எடுத்துச் செல்லப்பட்ட போதிலும் அது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஈ) கம்பிவலை சுற்றுவேலியின் முன்பக்கத்தில் நிறுவப்பட்ட 16 கொங்கிறீட் தூண்கள் உடைந்து காணப்படுகின்ற போதிலும் அவ்விடத்தில் மீண்டும் தூண்கள் நிறுவுவதற்கு சபையால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

ஒவ்வொரு உள்;ராட்சி மன்றத்திலும் தமது ஆற்றலுக்கு ஏற்றவாறு உள்ளகக் கணக்காய்வு பிரிவு ஒன்றை உருவாக்கி கொள்ள வேண்டுமென மாகாண சபைகள் மற்றும் உள்;ராட்சி அமைச்சின் 2005 நவம்பர் 08 ஆம் திகதிய 03 ஆம் இலக்க உள்;ராட்சி மறுசீரமைப்புச் சுற்றறிக்கையின் 8 ஆம் பந்தியில் தெரிவிக்கப்பட்டதற்கமைய சபையில் உள்ளகக் கணக்காய்வு பிரிவு உருவாக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. மனிதவள முகாமைத்துவம்

2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| பதவியணியினர் | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளவாறான பதவியணியினர் | வெற்றிடங்கள் |
|---|---|---|---|
| நிறைவேற்றுனர் | 01 | -- | 01 |
| உதவியாளர்கள் | 16 | 16 | - |
| சிற்றூழியர்கள் | 31 | 30 | 01 |
| | 48 | 46 | 02 |

முகாமைத்துவ சேவை அதி விசேட தரம் I இற்கான பதவி ஒன்று கடந்த 08 வருட காலமாகவும் சிற்றூழியர்களுக்கான 04 பதவிகள் கடந்த மூன்று வருட காலமாகவும் வெற்றிடமாகக் காணப்பட்ட போதிலும் அதனை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

7. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான முகாமைத்துவம்
(இ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு
(ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(உ) ஒப்பந்த முகாமைத்துவம்